செய்தி வெளியீடு எண்.24 நாள்.09.01.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் தொகுப்பு பரிசு பொருட்களை மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் ஆகியோர் வழங்கினார்கள்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்டத்தில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் தொகுப்பு பரிசு பொருட்களை மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் ஆகியோர் இன்று (09.01.2017) வழங்கினார்கள்.

பொன்னேரி வட்டம், எடையான்சாவடியில் பொங்கல் தொகுப்பு பரிசு பொருட்களை வழங்கி மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி பொங்கல் தொகுப்பு பரிசு பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படவுள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் மொத்தம் 5,19,334 பொங்கல் தொகுப்பு பரிசாக 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, முந்திரி, உலர் திராட்சை, ஏலகாய் மற்றும் 2 அடி கரும்பு ஆகியவை வழங்கப்படும் என்று கூறினார்.

ஆவடி வட்டம் நெமிலிச்சேரியில் பொங்கல் தொகுப்பு பரிசு பொருட்களை வழங்கி மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது மாண்புமிகு மறைந்த முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் வழிக்காட்டுதல்படி தமிழக அரசு மக்கள் நலனுக்காக செயல்பட்டுக் கொண்டு வருகிறது. ஏழை எளிய மக்கள் பொங்கல் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாட பொங்கல் தொகுப்பு பரிசு பொருட்களை தமிழக அரசு வழங்குகிறது என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள், திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.பி.வேணுகோபால், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.பலராமன், பொன்னேரி சார் ஆட்சியர் திரு.வி.பி.தண்டபானி, இ.ஆ.ப., திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.எஸ்.ஜெயச்சந்திரன், மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.வ.சந்தியா, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திருமதி.ம.தமிழ்செல்வி,மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~